**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்**

# தேசிய வர்த்தக ஒற்றைச் சாளர அமைப்புத்திட்டம் (TNSWSP)

# ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு (EOI)

## சிரேஷ்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அலுவல்கள் அலுவலர் பதவிக்கான பணிக்கூறுகளை நிறைவேற்றுவதற்கான (தனிநபர்) பணி ஒப்படைப்பு

1. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிபடுத்தல் ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்ட ஒரு நாடு என்ற வகையில், இலங்கை ஆனது, வர்த்தகர்களால் அவர்களது எல்லை தாண்டிய வர்த்தக பாய்ச்சல்கள் (இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் கலம் மாற்றல்கள்) சம்பந்தமான தரவு மற்றும் ஆவணங்களை எல்லை வர்த்தக ஒழுங்குபடுத்தும் அமைப்புக்களுக்கு சமர்ப்பிப்பதற்கும் அத்தகைய செயன்முறைகளின் முடிவுகளை வர்த்தகர்களுக்கு அறிவிப்பதற்கும் ஒரே உள்ளீட்டு முகப்பில் தானியங்கி முறையினூடாக வழங்கும் ஒரு தேசிய வர்த்தக ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு கடமைப்பட்டுள்ளது. அதன்படி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தனிப்பயனாக்கப்பட்ட திட்ட நடைமுறைப்படுத்தும் அலகின் (PIU) ஊடாக தேசிய வர்த்தக ஒற்றைச்சாளர அமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

   இந்நிலையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது, மேற்படி திட்ட நடைமுறைப்படுத்தும் அலகின் சிரேஷ்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலர் பணிக்கூறுகளை பூர்த்தி செய்வதற்காக பொது அல்லது தனியார் துறையிலுள்ள தகுதியுடைய தனிநபர்களிடமிருந்து, 24 மாத காலத்திற்கான பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஆர்வத்துக்கான வெளிப்படுத்துகையை அழைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

2. ஆர்வம் உள்ள தனிநபர்கள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வலைத்தளத்தில் இருந்து **"திட்ட நடைமுறைப்படுத்தும் அலகின் (PIU)சிரேஷ்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலர் பதவிக்கான பணிக்கூறுகளை நிறைவேற்றுவதற்கான பணி ஒப்படைப்பு ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு (EOI)"** என்னும் தலைப்பிடப்பட்டுள்ள ஆவணத்தினை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

3. திட்ட நடைமுறைப்படுத்தும் அலகின் (PIU) சிரேஷ்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலர் பதவிக்கான பணிக்கூறுகளை நிறைவேற்றுவதற்கான 24 மாத கால பணி ஒப்படைப்பிற்கு விண்ணப்பிக்க விரும்பும் தனிநபர்கள் பணி வரையறையில் (TOR) குறிப்பிடப்பட்ட தகுதிகளை திருப்திகரமாக பூர்த்தி செய்ய வேண்டியது அவசியம்.

4. ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பானது, அனைத்து தகுதிகள் மற்றும் அனுபவங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல்களுடன் தகுதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆவணச்சான்றுகளும் தொழில் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்காக முன்னைய தொழில் வழங்குநர்களிடமிருந்தான சான்றாதாரங்களும் அவற்றுடன் பணி வரையறையில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ளது போல, கால வரையறைகளை உள்ளடக்கிய எதிர்பார்க்கை பணிக்கூறுகள் மற்றும் பொறுப்புகளுடன் இணைந்த விரிவான முன்மொழிவு மற்றும் வேலைத்திட்டத்தினையும், "திட்ட நடைமுறைப்படுத்தும் அலகின் (PIU) சிரேஷ்ட சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலர் பதவிக்கான பணிக்கூறுகளை நிறைவேற்றுவதற்கான (தனிநபர்) பணி ஒப்படைப்பு ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு (EOI)" என்றவாறு கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு 2025.07.12 அல்லது முன்னதாக கிடைக்குமாறு பதிவுத் தபால் / நேரடியாக **மட்டும்** அனுப்ப / ஒப்படைக்க வேண்டும். **மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதி முன்மொழிவுகள் ஆகியவை இரு(2) வேறு கடித உறைகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பது தெரிவிக்கப்படுகிறது.**

5. விண்ணப்பதாரர்களில் இருந்து பணிவரையறையில் (TOR) குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தகுதிகளை கொண்ட விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு அடுத்த கட்டமாக மேசை நேர்முகத்தேர்வின் மூலம் மிகத் தகுதியான விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார். இறுதி தெரிவுக்காக, தகுதிகளும் செலவும் கருத்திற் கொள்ளப்படும்.

6. இந்தத் தேர்வு செயன்முறையின் போது எழும் எந்தவொரு தொடர்புடைய பிரச்சினைக்கும் அல்லது இதில் இற்றைப்படுத்தப்படாத விடயத்திற்கும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியும் அறுதியுமாக அமையும்.

7. தேவையான ஆவணங்களை (TOR, EOI போன்றவற்றை) பெற நிதி அமைச்சின் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்

**செயலாளர்**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**செயலகம்**
**கொழும்பு 01**
**திகதி: 29.06.2025**